2. அறிவிப்புகள்

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களைப் பேரவையின் 7-வது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன்:

திரு. அ. பாப்பா சுந்தரம்

திரு. ஆர்.பி. உதயகுமார்

திரு. கே.பி. அன்பழகன்

திரு. ஆர். சின்னசாமி

திரு. பி.ஜி. நாராயணன்

திரு. சு. குணசேகரன்

3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு வழக்குரைஞர்களுடைய எழுத்தர்கள் நல நிதியத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்களுடைய எழுத்தர்கள் நல நிதியத் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்களுடைய எழுத்தர்கள் நல நிதியத் (திருத்தச்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்”.

எனக் கோருகிறேன்.